**அரையாண்டுப் பொதுத்தேர்வு – 2015**
**பத்தாம் வகுப்பு – தமிழ் முதல் தாள்**
**விடை குறிப்புகள்**

1. இ. பாரதிதாசன் 2. ஆ. சேர 3. அ. பன்னாடு தந்த மாறன் வழுதி
4. ஆ. சிலப்பதிகாரம் 5. அ. விமானி 6. இ. தாராபாரதி

7. தென்னை 8. மருணீக்கியார் 9. மிளைகிழான் நல்வேட்டனார்
10. திருக்குறள் 11. அம்பேத்கர் 12. கருத்துப்படம்

13. ஓய்வெடுத்தல் 14. குற்றமில்லாத 15. காடு 16. படகு

(17 – 20 பொருத்தமான விடை எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)
17. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்என்று விரும்பியவர் யார்?
(அ) பெரியார் எதை விரும்பினார்?
18. ஆய கலைகள் மொத்தம் எத்தனை?
19. காந்தியடிகள் எந்த நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்?
20. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் எது மலரும்?

21. 1. காலமறிந்து இடத்தோடு பொருத்தச் செயல்பட்டால் உலகம் கருதினும் கைகூடும்
22. 1. ஒழுக்கத்தால் எய்துவது மேன்மை 2. இழுக்கத்தால் எய்துவது பழி
23. 1. இராமன் 2. குகனிடம் கூறியது

24. 1. "கல்லோடு சேர்த்துக்கட்டிக் கடலில் எறிந்தபோது, அக்கல்லினையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய பெருமையினை உடையவர் திருநாவுக்கரசர்"

25. 1. அறிவிற் சிறந்த பெரியோரை 2. உறவினராய் ஏற்று நடத்தல் தலையாயது ஆகும்.

26. 1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா

27. 1. தழை 2. தவம் 3. சித்து 4. களி
(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)

28. 1. பேச்சு மொழி 2. எழுத்து மொழி 3. ஆட்சி மொழி 4. நீதிமன்ற மொழி
5. பயிற்று மொழி என அமைய வேண்டும்

29. 1. மருத்துவம் 2. பொறியியல் 3. வேளாண்மை 4. சட்டம்

30. 1. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை 2. பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

31. 1. பாணன் 2. பாடினி 3. கூத்தன் 4. விறலி

32. 1. கண்ணிடத்து அப்பியவர் கண்ணப்பன் 2. ஊனுக்கு ஊன்

33. 1. கதர் இயக்கம் 2. மது விலக்கு 3. தீண்டாமை ஒழிப்பு

34. 1. திருவருட்பா 2. வடிவுடை மாணிக்க மாலை 3. எழுத்தறியும் பெருமான் மாலை

(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)

35. 1. வாழ்க்கையாகிய வழித்தடங்கள் குப்பைக் கூளங்களால் அடைபடும் முன் நேர்வழியில் செல்க.
    2. கால்கள் இரண்டும் கடப்பதற்கே.
    3. கைகள் இரண்டும் புதர்களை அறுப்பதற்கே.
    4. கண்கள் வழிகாட்ட காதுகள் துணை வர விண்ணைக் கீறி வழியமைக்க வீரமனத்துடன் செல்க.
    5. இன்று இளைப்பாறுவோம் என்றில்லாமல் சோம்பலை ஒழித்துச் செயலை முடிக்க.
    6. இளைப்பாறாத செடி வெற்றி என்னும் பூக்களை பெற்றிடும்.

36. 1. அன்பு உள்ளத்துடன் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைப்பதற்கு அரியன.
    2. அமுதத்தைவிடச் சிறந்தன.
    3. எத்தகையனவாய் இருப்பினும் அன்பு கலந்ததால் தூய்மையானவையே!
    4. நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம

37. 1. அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில் அரசர் முன் செல்வது செல்வமன்று.
    2. அது அவரவர் முன் வினைப் பயன் மட்டுமே.
    3. புகலிடம் வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம் எனச் சான்றோர் கூறுகின்றனர்

38. 1. பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப் புலவர்கள் கூட்டம் பெருகாமல் இருப்பதற்கு
        1. தலையில் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும்,
        2. செவியை அறுப்பதற்கு வில்லிபுத்தூரானும்,
        3. தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் - ஆவர்

39. 1. நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறுவது
    2. சீறா - வாழ்க்கை, புராணம் - வரலாறு
    3. விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
    4. 5027 விருத்தப்பாக்களால் ஆனது.
    5. ஆசிரியர் - உமறுப் புலவர்

40. 1. மாநிலம் - மாராட்டியம், மாவட்டம் - இரத்னகிரி, ஊர் - அம்பவாடே
    2. 1891 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 14ஆம் நாள் பிறந்தார்.
    3. இயற்பெயர் - பீமாராவ் ராம்ஜி
    4. மகாபாரதப் பீமனைப் போலவே வருங்காலத்தில் வீரனாக வரவேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப் பெயர் சூட்டினர் பெற்றோர்.

41. 1. தமிழரிடம் இன்று பரவியுள்ள நோய் மணக்கொடை
    2. தன் மகனுக்காக செலவழித்தப் பணத்தை முதலீடாகக் கருதி வரப்போகும் மனைவியிடம் பெற்றுவிட வேண்டுமென்றுத் துடிக்கின்றனர்.
    3. அன்பும், தியாக உணர்ச்சியும் இருந்தால் இம்மாதிரியான கொடுமைகளை ஒழிக்க இயலும்.
    4. தமிழ்நாட்டு இளைஞர்கள் செக்கு மாடுகளாக இல்லாமல் பந்தயக் குதிரைகளாக மாறி தாமே முன்னேற வேண்டும்.

42. 1. கேட்போரைத் தன்வயப்படுத்தும் முறையில் தொடங்குதல் வேண்டும்.
    2. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குதல் வேண்டும்.
    3. ஓரிரு மணித்துளிகளில் பொருளில் புகுந்துவிட வேண்டும்
    4. இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப அமைதல் வேண்டும்.

43. 1. அரிச்சந்திரன் நாடகம்
2. உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரன்
3. அரிச்சந்திரனை பொய் பேச வைக்க, பல இன்னல்களை உருவாக்குகிறார் விசுவாமித்திரர்.
4. நாடு, மனைவி, மகன் இழப்பினும் பொய் சொல்லேன்
5. அரிச்சந்திரனின் வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள் தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி கொண்டார்

44. 1. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் தமிழின் பழஞ்சிறப்பினை
2. "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்" எனப் பாராட்டுகிறார்

45. 1. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் 2. குலசேகர ஆழ்வார் 3. மாலையணிந்த அரசன்
4. போன்று + இருந்தேன் 5. மீன்நோக்கும் - பானோக்கா , தானோக்கா – கோனோக்கி

46. 1. உயர்தனிச் செம்மொழி (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்)
2. திராவிட மொழிகளுக்கும், பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது
3. 180 மொழிகள் 4. அகம் புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர் 5. திருக்குறள்

47. அ. 1. பகை வெல்லக் கருதும் அரசன், காலம் அறிந்து செயல்பட வேண்டும்.
2. காலத்திற்கு பொருந்திய செயலை செய்வதே செல்வத்தை நீங்காமல் கட்டும் கயிராகும்.
3. தகுந்த கருவிகளோடு காலம் அறிந்து செயல்பட வேண்டும்.
4. காலமறிந்து செயல்பட்டால் உலகத்தையே அடையலாம்.
5. ஊக்கமுடையவன் காலத்தை எதிர்பார்த்து வெல்வான்.
6. பகைவரைக் காணும் போது பணிவாக இருத்தல் வேண்டும்.
7. வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல அமைதியாக இருத்தல் வேண்டும்.
8. வாய்ப்பு கிடைக்கும் போது விரைந்து செயலை முடித்தல் வேண்டும்.

47. ஆ. 1. ஆற்றையும், யானைகள் செல்லும் காட்டையும் கடந்து வந்த மனிதன் ஒருவன் புலியின் கொடுஞ்செயல்களை நபிகளிடம் சொல்லத் தொடங்கினான்.
2. புலி வாலினால் தரையை அடித்து உடல் நிமிர்ந்து கால்களை மடக்கி, தரையில் படுத்து, கண்களில் தீப் பொறிகளை கக்க, வெண்பற்கள் ஒளி வீச, வாயில் புலால் நாற்றம் வீச சினத்தோடு இருந்தது.
3. சிங்கம் தவிர்த்த விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.
4. காட்டெருமைகளும், கரடிகளும், கலை மான்களும், புலியின் செயலை பார்த்து நடுக்கமுற்றன.
5. நபிகளை கண்ட புலி தன் வாலை வலைத்து, உடல் நடுங்க, மெல்ல மெல்ல நடந்து வந்து, திருவடிக்காட்சி கிடைத்ததென்று தலை தாழ்ந்தி வணங்கியது.
6. நபிகள் புலியின் தலையை தன் மணிக்கரத்தினால் தடவினார்.
7. இன்று முதல் உயிர் வதை செய்வதை விடுத்து வேறொரு காட்டிற்கு செல்வாயாக என்று நபிகள் கூறினார்
8. புலி நல்லது நல்லது என்று அவ்விடத்தை விட்டு நீங்கியது.

48. அ. 1. பெண்கள் கல்வி பெறுவது உரிமை
2. சமூக மாற்றம்
3. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்க வேண்டும்.
4. உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தரவேண்டும்.
5. கணவனுக்கு மட்டும் உழகைக்கும் அடிமையாக இருத்தல் கூடாது.
6. சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டும்.
7. சொத்துரிமை வழங்க வேண்டும்.
8. அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணி பெற வேண்டும்.

48. ஆ. 1. உலகில் மொழி பிறப்பதற்கு முன்பே இசை பிறந்து விட்டது
2. மனிதன் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு இசையே கருவியாயிற்று.
3. பண்கள், இசைக்கருவிகள், இசைக்கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசைப் பற்றி ஏராளமான குறிப்புகள் இலக்கியங்களில் உள்ளன.
4. இசை மரபைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் வெளிப்படுத்துகின்றன.
5. இசைக்கான இலக்கண நூல் நரம்பின் மறை என்பார் தொல்காப்பியர்.
6. பாணர், பாடினி, கூத்தன், விறலி என்று இயலிசை நாடக கலைஞர்கள் இருந்தனர்.
7. பண்ணொடு தமிழொப்பாய் என்கிறது தேவாரம்.
8. தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி எனப் பல்வேறு இசைக் கருவிகள் தமிழர்கள் வாழ்வில் இருந்தது.

49. அ. பல்லார் பகைகொளலிற் பத்தடுக்க தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

இ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

ஈ. திருமறையோர் அதுமொழியத் தருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார்


ஆ. பன்னீர் செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)
அரசு உயர்நிலைப் பள்ளி
கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517
மின்னஞ்சல் : inikavi117@gmail.com


